DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 323/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW3 (LW7)
Defence

Name : Vijay

Father Name /
Husband Name : Dharmaraj

Village : Auroville

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 27th January 2026

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் ஆரோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனி நடத்தி வருகிறேன். சாட்சி சாந்தன் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2020 வருடத்தில் ஒரு நாள் நான் எனது வீட்டருகே இருந்தபோது ஆரோவிலில்

உள்ள வெல்கபே அருகே போலிசார் விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன்.

என்னுடன் சாந்தன் என்பவர் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தர். **பார்வைமகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் அண்ணாமலை யூனிவர்சிட்டியில் பொறியியல் படித்துள்ளேன். நான் தற்போது குடியிருக்கும் வீட்டில் 2010 முதல் வசித்து வருகிறேன். நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதப்பட்டது என்று படித்து பார்க்கவில்லை. போலிசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் மட்டும் செய்தேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

ஓம்/-XXXX,
நீதித்துறை நடுவர்,
வானூர்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 323/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 4(LW8)
Defence

Name : Santhan

Father Name /
Husband Name : Sakthivel

Village : Auroville

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 27th January 2026

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் ஆரோவில்லில் குடியிருந்து வருகிறேன். நான் ஆரோவில்லில் வேலை செய்துவருகிறேன். சாட்சி விஜயை தெரியும். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் வீட்டில் இருந்தபோது போலிசார் சம்பவம் குறித்து

ஆரோவில்லில் உள்ள வெல்கபே அருகே விசாரணை செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள்.

நானும் சாட்சி விஜயும் சம்பவ இடத்தில் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது நான் பள்ளிக்கூடத்தில் படித்து கொண்டிருந்தேன். நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதப்பட்டது என்று படித்து பார்க்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் போட்டோன். போலிசார் என் வீட்டருகே வந்து கையொப்பம் பெற்றார்கள். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

ஒம்/-XXXX,
நீதித்துறை நடுவர்,
வானூர்.